திருவாரூர்த் தமிழ்ச்சங்கப் பிரசுரம் நெ. 2

புறத்திரட்டு.

அறத்துப்பால்.

முதற்பகுதி.

ஏட்டுப்பிரதிகளிலிருந்து முதற்றடவையாக அச்சிடப்படுவது
இது பகுதி பகுதியாக வெளிவரும். முற்றிலும்
அச்சிட்டபிறகு முகவுரை முதலியன பிரசுரம் செய்

இலக்கண விளக்க பரம்பரை
சோமசுந்தர தேசிகரால்
பரிசோதிக்கப்படுவது.

திருவாரூர் விக்டோரியா அச்சுக்கூடத்தில்,
அச்சிடப்பட்டு.

திருவாரூர்த் தமிழ்ச்சங்கத்தாரால்
வெளியிடப்பட்டது.

1918. [வில

Rights Reserved.

G-IX.
N18
148070

உ

கடவுள் துணை

புறத்திரட்டு.

முதலதிகாரம்.—கடவுள்வாழ்த்து.

1. தன்மேற் றுன்கினு மொன்றுகைம் மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே. * (௧)

2. மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரு
மாதிரையா னாதிரையா னென்றே யறையுமா
லூர்திரைநீர் வேலி யுலகு. * முத்தொள்ளாயிரம். (௨)

3. மதிமன்னு மாயவன் வாண்முக மொக்குங்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கு
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளி
னிதிமலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரேய்க்கு நிறம். நான்மணிக்கடிகை. (௩)

4. கண்ணகன் ஞால மளந்ததூஉங் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம்—நண்ணிய
மாயச் சகட முதைத்ததூஉ மிம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி. † திரிகடுகம் (௪)

---

* இப்பாக்கள் கிடைத்த மூன்று பிரதிகளுள்ளும் இருப்பவை. ஆயினும் இராஜாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதியைத் தவிர்த்து மற்றைய விரண்டு பிரதிகளுள்ளும் "கடவுள்வாழ்த்து" அதிகாரத்தில் சேர்[illegible] எண்ணப்படாமல் அதிகாரத்துக்கு விலக்காய்க் காணப்ப[illegible]ா.

† இச்செய்யுள் இராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் [illegible] மாத்திரம் காணப்படுவது.

5. கண்மூன் றுடையான்றாள் சேர்தல் கடிதினிதே
தொண்மாண் டுழாய்மாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமர்ந் தேத்த லினிதே. இனியநாற்பது. (ரு)

6. நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழனாறிக்
காலை யிருள்சீக்குங் காய்கதிர்போற் —நீகால
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்று
ணணிச்சே வடியெம் மரண். இரும்பல்காஞ்சி. (சு)

7. மூவாமுதலாவுலகமொருமூன்றுமேத்தத்
தாவாதவின்பந்தலையாயதுதன்னினெய்தி
யோவாதுநின்றகுணத்தொண்ணிதிச்செல்வனென்ப
தேவாதிதேவனவன்சேவடிசேர்துமன்றே. சிந்தாமணி (எ)

8. முன்றான் பெருமைக்கணின்றான் முடிவெய்து காறு
நன்றே நினைந்தான் குணமே மொழிந்தான் றனக்கென்
றொன்றானு மில்லான் பிறர்க்கே யுறுதிக் குழன்று
னன்றேயிறைவ னவன்றாள்சரணாடுமன்றே. குண்டலகேசி (அ)

9. கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
யூர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
யெ[illegible]யிர்க்கு மேம மாகிய
உ[illegible] வறியாக் காகத்துத்
தாழ்சடைப்பொலிந்த வருந்தவத் தோற்கே. புறநானூறு (௯)

10. மூவிலை நெடுவேலாதி வானவ
னிடமருங் கொளிக்கு மிமையக் கள்வி
தனிக்கண் விளங்கு நுதற்பிறை மேலோர்
மிசைப்பிறை கதுப்பிற் சூடி வளைக்கையின்
வாள்பிடித் தாளி யேறித் தானவன்
மாளக் கடும்போர் கடந்த குமரி
மூவா மெல்லடித் திருநிழல்
வாழி காக்கவிம் மலர்தலை யுலகே. ஆசிரியமாலை. (௯)

இரண்டாம் அதிகாரம்.—அவையடக்கம். †

11. வியத்தக்க காணுங்கால் வெண்மையிற் றீர்ந்தார்
வியத்தக்க தாக வியப்பர்—வியத்தக்க
வல்ல வெனினு மறியாதார் தாம்போல
வெல்லாம் வியப்ப ரிங்கு. * பழமொழி (௧)

12. முந்நீர்ப்பிறந்தபவளத்தொடுசங்குமுத்து
மந்நீருவர்க்குமெனின்யாரவைநீக்குகிற்பா
ரிந்நீரவென்சொற்பழுதாயினுங்கொள்பவன்றே
பொய்ந்நீரவல்லாப்பொருளால்விண்புகுதுமென்பார். சிந் (௨)

13. கற்பாலுமிழ்ந்தமணியுங்கழுவாதுவிட்டா
னற்பாலழியுந்நகைவெண்மதிபோனிறைந்த
சொற்பாலுமிழ்ந்தமறுவும்மதியாற்கழூஉவிப்
பொற்பாவிழைத்துக்கொளற்பாலர்புலமைமிக்கார். சூ (௩)

14. நோய்க்குற்ற மாந்தர் மருந்தின் சுவைநோக் ககில்லார்
தீய்க்குற்ற காத லுடையார் புகைத்தீமை யோரார்
போய்க்குற்ற மூன்று மறுத்தான் புகழ்கூறு வேற்கென்
வாய்க்குற்ற சொல்லின் வழுவும் வழுவல்ல வன்றே நீல (௪

* இப்பாடல் "பழமொழி" என்று மற்றிரண்டு பிரதிகளில் காணப் பட, இராசாங்கக் கையெழுத்துப் புத்தக சாலைப் பிரதியில் "தகடூர்யாத் திரை" என்று எழுதப்பட்டிருக்கிறது.

† ஆஞர்ப் பிரதியிலும், தஞ்சை சரஸ்வதிமால் பிரதியிலும் [illegible] காரம் "நீத்தார் பெருமை" யின் பின்னர் வைக்கப்பட்டுள்ளது.

மூன்றும் அதிகாரம்.—நீத்தார் பெருமை.

15. மனத்தினும் வாயினு மெய்யினுஞ் செய்கை
யனைத்தினு மான்றவிந் தாராகி—நினைத்துணர்ந்
தொன்றும் பரியலரா யோம்புவா ரில்லெனிற்
சென்று படுமா முயிர். பழமொழி. (க)

16. கரிய மாலினுங் கண்ணுத லானினு
முரிய தாமரை மேலுறை வானினு
விரியும்பூ தமோ ரைந்தினு மெய்யினும்
பெரியா ரந்தணர் பேணுதியுள்ளத்தால். இராமாவதாரம். (உ)

17. [illegible]ளர் முனிபவு மாங்கவர்
சிந்தை யாலருள் செய்யவுந் தேவரில்
நொந்து ளாரையு நோதகன் றோரையு
மைந்த வெண்ண வரம்புமுண் டாகுமோ இராமாவதாரம். (ங)

18. ஆவ தற்கு மழிவதற் குமவா
மேவ நிற்கும் விதியுமென் றாலினி
யாவ தெப்பொரு ளிம்மையு மம்மையுந்
தேவ ரைப்புர வுந்துணை சேர்த்ததே. இராமாவதாரம். (ச)

19. கிழிந்த சிதா அ ருடுத்து மிழிந்தார்
போலேற் [illegible]டும் பெருக்கத்தா நாற்றிதழ்த்
தாமரை யன்ன சிறப்பி னார்தா
மூண்ணிற் றீயுடம் புண்ணும் படிவத்தார்
தீயவை யாற்றுழி யாற்றிக் கழுவுபு
தோற்ற மவிர முருக்கங் கோலுடுத்த
கோலார் துவர மன்னு மாடையர்
பாடி னருமறை யர்நீ டினுருவந்
தயக்குத் [illegible]மா யவிரு
[illegible]ளர்க்கொ ருஉக வீதே. தகடூர்யாத்திரை. (ரு)

நான்காவது அதிகாரம்.—பெறுதற்கருமை.

20. மக்களுடம்பு பெறற்கரிது பெற்றபின்
மக்க ளறியு மறிவரிது—மக்க
ளறிவறிந் தானென்பா ரறத்தின் வழுவார்
நெறித்தலை நின்றொழுகு வார். அறநெறிச்சாரம். (க)

21. பரவைவெண்டிரைவடகடற்படு நுகத்துளையுட்
டிரைசெய்தென்கடலிட்டதோர்நோன்கழிசிவணி
யரசவத்துளையகவயிற்செறிந்தெனவரிதாற்
பெரியயோனிகள்பிழைத்திவண்மானிடம்பெறலே. சித்தாமணி. (உ)

22. விண்டுவேய்நரலுன்விளைகானவரிட்டினுங்
கொண்டுகூர்ம்பனிகொலைத்திடுநிலைக்களக் குறும்பு
முண்டுநீரெனவுரையினுமரியனவொருவி
மண்டுதீம்புனல்வளங்கெழுநாடெய்தலரிதே. சிந்தாமணி. (ங)

ஐந்தாம் அதிகாரம்—அறன்வலியுறுத்தல்.

23. ஈனுலகத் தாயி னிசைபெறூஉ மஃதிறந்
தேனுலகத் தாயி னினிதாகுந்—தானொருவ
னுள்வாயு நல்லறஞ் செய்வாற் கிரண்டுலகும்
வேள்வாய் கவட்டை நெறி. பழமொழி (க)

24. பலநாளு மாற்றா ரெனினு மறத்தைச்
சிலநாள் சிறந்தவற்றாற் செய்க—முலைநெருங்கி
நைவது போலு நுசுப்பினாய் நல்லறஞ்
செய்வது செய்யாது கேள். பழமொழி. (உ)

25. முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்
பிற்பெரிய செல்வம் பெறுபவோ—வைப்போ
டிகலிப் பொருள்செய்ய வெண்ணியக்கா லின்று
முதலிலார்க் கூதிய மில். பழமொழி (ங)

26. தக்கயில் செய்கைப் பொருள்பெற்ற லப்பொரு
டொக்க வகையு முதலு மதுவானால்
மிக்க வகையா லறஞ்செய் கெனவெகுடல்
அக்காரம் பால்செருக்கு மாறு. பழமொழி. (௪)

27. இன்றி யமையா விருமுது மக்களும்
பொன்றின்மை கண்டும் பொருள் பொருளாக் கொள்பவோ
வொன்றும் வகையா லறஞ்செய்க வூர்ந்துருளிற்
குன்றும் வழிபடைப்ப தில். பழமொழி (௫)

28. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு. நாலடி. (௬)

29. கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்கால் துயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர். நாலடி. (௭)

30. மக்களா லாய பெரும்பயனு மாயுங்கா
லெத்துணையு மாற்றப் பலவானாற்—றொக்க
வுடம்பிற்கே யொப்பரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும். நாலடி. (௮)

31. தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்றி
யாங்கணுந் தேரிற் பிறிதில்லை—ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே
கூற்றங் கொண்டோடும் பொழுது நாலடி (௯)

32. நீரற நன்று நிழனன்று தன்னில்லுள்
பாரற நன்றுபாத் துண்பானேற்—பேரற
[illegible] தளிசாலை நாட்டிற் பெரும்போக
மொன்றுமாஞ் சால வுடன். சிறுபஞ்சமூலம். (௰)

அறன்வலியுறுத்தல்.

33\. உலகெலாங் காக்கு மொருவ னொருவ
னுலகெலாங் காலா லழன்றும்—விலையுண்டங்
காராது நல்கூரு மென்று மறம்பாவம்
பாராத தென்னேவிப் பார். பாரதம். (௰௧)

34\. காட்சி யொழுக்கொடு கல்வி தலைநின்று
மாட்சி மணவாழ்த லன்றி—மீட்சியில்
வீட்டுலக மெய்தலென விரண்டே நல்லறங்
கேட்டதனு லாய பயன். அறநெறிச்சாரம். (௰௨)

35\. நற்றானஞ்சிலமடுங்காத்தவமறிவர்சிறப்பிந்நான்கு
மற்றாங்குச்சொன்னமனைவியர்களுணவர்வயிற்றேன்றி
யுற்றானொருமகனேமேற்கதிக்குக்கொண்டுபோமுரவோன்றன்னை
பெற்றார்மகப்பெற்றாரல்லாதார்பிறர்மக்கள்பிறரேகண்டீர். சிந்தா (௰௩)

36\. வேற்றுவரில்லா நுமரூர்க்கேசெல்லினும்வெகுண்டீர்போலி
ஆற்றுணைக்கொளாதடிபுறத்துவைப்பீரேயல்லிர்போலும்
கூற்றங்கொண்டோட்டத்தமியேகொடுநெறிக்கட்செல்லும்போழ்தி
னாற்றுணக்கொள்ளீரழகலாலறிவொன்றுமிலீரேபோலும் சிந்தா

37\. புள்ளிநீர்வீழ்ந்ததுபெருகிப்புன்புலா
லுள்வளர்ந்தொருவழித்தோன்றிப்போற
முள்குமென்முழுப்புலாற்குரம்பையுய்ந்துபோய்
வெள்ளநீரின்பமேவிளைக்குமென்பவே' சிந்தாமணி. (௰௫)

38\. பாற்றுளிபவளநீர்பெருகியூன்றிரண்
டேற்றுநீர்க்குறும்புழையுய்ந்துபோந்தபின்
சேற்றுநீர்க்குழியுளேயழிந்திச்செல்கதிக்
காற்றுணைப்பெறுதழுதலறிவீழுமே. சிந்தாமணி. (௰௬)

39\. மாய்தலும்பிறத்தலும்வளர்ந்துவீங்கலுந்
தேய்தலுமுடைமையைத்திங்கள்செப்புமால்
வாய்புகப்பெய்யினும்வழுக்கினல்லறங்
காய்வதுகலதிமைப்பாலதாகுமே. சிந்தாமணி. (

40\. திருந்தியநல்லறச்செம்பொற்கற்பகம்
பொருந்தியபொருளொடுபோகம்பூத்தலால்

வருந்திணையறத்திறமறத்தலோம்புமின்
கரும்பெனத்திரண்டதோட்காலவேற்கணீர். ஷை (௰௮)

41. பிறந்தவர்களெல்லாமவாப்பெரியராகித்
துறந்துபுகழ்வேண்டாரோராறற்றவிழுமியா
ரறங்கரிதுசெய்தென்பதியாதுமறியாரேல்
வெறும்பொருளதம்மாவிடுத்திடுமினென்றாள் ஷை (௰௬)

42. புள்ளுவர்கையுறூஉய்ப்பும்புள்ளுள
கள்ளவிழ்கோதையீர்காண்மினல்வினை
யொள்ளியானொருமகனுரைத்ததென்னன்மின்
றெள்ளியீரறத்திறந்தெரிந்துகொண்மினே. சிந்தாமணி (௨௰]

43. செய்குவங் கொல்லோ நல்வினை யெனவே
யையம் மருஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே யதனா
லுயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோரே
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனிற்
செய்யா வுலகத்து நுகர்ச்சியுங் கூடும்
செய்யா வுலகத்து நுகர்ச்சி யில்லெனிற்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தறவத் தலையே, புறநானூறு [௨௧)

44. எளிதென விகழா தரிதென வுரையாது
நுமக்குநீர் நல்குதி ராயின் மனத்திடை
நினைப்பினும் பிறக்கு மொழியினும் வளரும்
தொழிற்படிற் சினைவிடூஉப் பயக்கு முணர்த்தி
சிவ[illegible]ப்பெருந் துணையே யதனாற்
[illegible]றைதொறுந் துறைதொறு நோக்கி
யறமே நிறுத்துமி னறிந்திசி னோரே. ஆசிரியமாலை (௨௨)

ஆறாம் அதிகாரம்—இல்வாழ்க்கை.

45. மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையு
தவமிலா ரில்வழி யில்லை தவமு
மரசிய லில்வழி யில்லை யரசனு
மில்வாழ்வா னில்வழி யில். நான்மணிக்கடிகை. [க]

46. செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லன
† தான மறவாத் தன்மையார்க் கஃதென்ப
யாமே பெற்ற தவிசு. அறநெறிச்சாரம். [உ]

47 மருவிய காதன் மனையாளுந் தானு
மிருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லா—லொருவரா
லில்வாழ்க்கை யென்னு மியல்புடைய பொற்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று. அறநெறிச்சாரம். [ந]

48. வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலு மத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்பி னஃதன்றோ
வைப்பினில் வைப்பென் பது. பழமொழி. [ச]

49. மல்லற் பெருஞ்செல்வ மாண்டவர் பெற்றக்காற்
செல்வுழியு மேமாப்பச் செய்வதா—மெல்லியற்
சென்றேசிந் தொல்கு நுழைநுண ணூசிப்பினாய் *
மென்றிருந்து வெல்லஞ் செயல். பழமொழி. [ரு]

50. தான்பிறந்த வில்லினைந்து தன்னைக் கடைப்பிடித்துத்
தான்பிறராற் கருதற் பாடுணர்ந்து—தான்பிறரா
சாவ வெனவாழான் சான்றோராற் பல்யாண்டும்
வாழ்கவென வாழ்த னன்று சிறுபஞ்சமூலம். [சு]

† தான மறவாத் தன்மையரே லஃதென்பர், வானகத்து வைப்ப தோர் வைப்பு எனவும் பாடம்.

* ஒல்கு நசுப்பினாய் பைங்கரும்பு எனவும் பாடம்.

51. அரம்போற் கிளையடங்காப் பெண்ணவியர்த தொண்டு
மரம்போன் மகன்மாறாய் நின்று—கரம்போலக்
கள்ளநோய் காணு பயலைந்து மாகுமே
லுள்ளநோய் வேண்டா வுயிர்க்கு. சிறுபஞ்சமூலம். [௭]

52. கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சா
னிழிந்தவ்வ யின்புறா னில்லார்—மொழிந்தவை
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோரா
லின்மொழியா லேத்தப் படும். சிறுபஞ்சமூலம். [௮]

53. புண்பட்டார் போற்றுவா ரில்லாதார் போகுயிர்கள்
கண்கெட்டார் காலிரண்டு மில்லாதார்—தங்கட்பட்
டாழ்ந்து நெகிழ்ந்தவர்க் கீந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் வகுத்து. ஷை [௯]

54. சிறைக்கிடந்தார் சகத்தார்க்கு நோற்பார் பலநா
ளுறைகிடந்தா ரொன்றுடையிட் டுண்பார்—பிறைகிடந்து
முற்றனைத்து முண்ணு தவர்க்கீந்தார் மன்னராய்க்
கற்றனைத்தும் வாழ்வார் கலந்து. ஷை [௰]

55. துறந்தார் துறவநதார் துப்பிலார் தோன்றா
திறந்தா ரீடற்றா ரிளையார்—சிறந்தவர்க்குப்
பண்ணுருஞ் சொல்லாய் பழிப்பிலூண் பாற்படுத்தான்
மண்ணாளு மன்னனா மற்று ஏலாதி. [௧௧]

56. நடப்பார்க்கூ ணல்ல பொறைதாங்கி னுருங்
கிடப்பார்க்கூண் கேளிர்க்கூண் கேடின்—றுடக்கார்
வானத்தார்க் கூணே மறுதலையார்க் கூணமைத்தான்
றனகத்தால் வாழ்வான் றக. ஏலாதி. [௧௨]

57. அறிவதறிந் தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனா
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது. நாலடி [௰௩]

58. கரும முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம். நாலடி. [௫௪]

59. விருந்தின்றி யுண்ட பகலுந் திருந்திழையார்
புல்லப் புடைபெயராக் கங்குலும்—இல்லார்க்கொன்
றீயா தொழிந்தமைந்த1 காலையு மிம்மூன்று
நோயே யுரனுடை யார்க்கு. திரிகடுகம். [௫௫]

60. கோலஞ்சா2 தாரோடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்—சீர்பயவாத்
தன்மை யிலாள ரயலிருப்பு மிம்மூன்று
நன்மை பயத்த லில. திரிகடுகம். [௫௬]

61. கற்றவர் கடவுட் டானஞ் சேர்ந்தவர் களைக ணில்லா
ரற்றவ ரந்த ணாள ரன்றியு மவர்கள் போல்வார்க்3
குற்றதோ ரிடுக்கண் வந்தா லுதவுதற் குரித்தன்றாயிற்
பெற்றவில் வுடம்பு தன்னாற் பெறுபய னில்லை யன்றே
சூளாமணி. [௫௭]

62. யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரோ வென்குதி4 ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே. புறம். [௫௮]

பிரதிபேதம் 1 தொழிந்தகன்ற, 2 நோவஞ்சா, 3 ரன்றியுமயனை
தோர்க்கு, 4 கியரென வினவுதிராயின்

ஏழாம் அதிகாரம்—கற்புடை மகளிர்.

63. சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
மில்லிலே வந்த விருந்தோம்பிச்—செல்வத்
திடரின்றி யேமாந் திருந்தாரே யென்றுங்1
கடலுட் டுலாம் பண்ணினர். பழமொழி. [௧]

64. கட்கினியாள் காதலன் காதல்வகை புனைவா
ளுட்குடையா ளூர்நா ணியல்பினா—ளுட்கி
யிடனறிந் தூடி யினிதி னுணரு
மடமொழி மாதராள் பெண். நாலடி. [௨]

65. நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுறை சோரினு—மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளமைந்ததே2 யில். நாலடி. [௩]

66. மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிழைவிளக்கு நின்றிமைப்பி னென்னும்—விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு. நாலடி. [௪]

67. தொல்லை நீர்வேலிக் கணவன் கழல்வாழ்த்தி
யொல்லும் வகையால் விருந்தோம்பி—செல்லுந்த
மிற்செல்வ மின்றி யிரந்தவர்க் கீகல்லாப்
புற்செல்வம் பூவா புகழ். வெண்பாமாலை. 3 [௫]

68. கொய்தார மார்பிற் கொழுநன் றணந்தபின்
பெய்வளை யாட்குப் பிறிதில்லை—செய்த4
வளிமறையு மின்றி வழக்கொழியா வாயி
லொளிமனைக்கு நற்றுணை நாண். வெண்பாமாலை. [௬]

பிரதிபேதம். 1 காணும். 2 அமர்ந்ததே. 3 புறப்பொருள் வெண்பாமாலை. இல்லாண் முல்லை, கன்முல்லை. 4 வெய்ய.

69. நல்விருந் தோம்பலி னட்டாளாம் வைகலும்
இல்லினைச்5 செய்தலி னீன்றதாய்—தொல்குடியின்
மக்கட் பெறலின் மனைக்கிழத்தி யிம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன். திரிகடுகம். [௭]

70. வழிபா டுடையளாய் வாழ்க்கை நடாஅய்
முனியாது சொல்லிற்றுச் செய்யா6 தெதிருரையா
தேத்திப் பணியுமே லில்லாளை யாண்மகனும்
போற்றிப் புரியும் புகழ்ந்து.7 அறநெறிச்சாரம். [௮]

71. மக்கட் பெறுதன் மடனுடைமை மாதுடைமை
யொக்க வுடனுறைத லூணமைவு—தொக்க
விலைமக ளல்லாதாட் கைந்திவை8 கண்டீர்
தலைமகனைத் தாழ்க்கு மருந்து. சிறுபஞ்சமூலம். [௯]

72. எப்பணியா லின்புறுவர் காதலரக் காதலரை
யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—யொப்ப
மனங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றே
கனங்குழையார் தங்கள் கடன். பாரதம். (௰)

73. நாடு மூருந் தனிபுகழ்ந் தேத்தலும்
பீடு றும்மழை பெய்கெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடு சான்மிகு பத்தினி யாவதே. வளையாபதி. (௰௧)

74. சாமெனிற் சாதனோத றன்னவன் றணந்தகாலைப்
பூமனும் புனைதலின்றிப் பொற்புடன் பொலிந்திவாடி9
காமனே யெனினுஞ் சொல்லாற் கணவர்கை தொழுதுவாழ்வார்
தேமலர்த்திருவோடொப்பார்சேர்ந்தவர்செல்லறீர்ப்பார்சிந்தா (௰௨)

எட்டாவது அதிகாரம்—கற்பின்மகளிர்.

75. நிறையான் மிகுகல்லா நேரிழையார் தம்மைச்
சிறையா லகப்படுத்த லாகா—வறையோ

பிரதிபேதம். 5 இல்புறம்பெய்தாங்கு, 6 செய்து, 7 போற்றிப்புனையும் பரிந்து 8 அல்லலையல்லாமை பெண்மகளிர்க்கைந்து, 9 புலம்பவைகி

வருந்த வலிதினின் யாப்பினு நாய்வால்
திருத்துத லென்றுமோ வில். பழமொழி. (க)

76. பேணடக்கம் பேணுப் பெருந்தகைமை பீடுடைமை
நாணொடுக்க மென்றைந்து நண்ணின்றாய்ப்—பூணொடுக்கம்
பொன்வரைக் கோங்கமுலைப் பூந்திருவே யாயினுந்
தன்வரை தாழ்த்த லரிது. சிறுபஞ்சமூலம். (உ)

77. எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
யட்டில் புகாதா ளரும்பிணி—யட்டதனை
யுண்டியுதவாதா ளில்வாழ்வே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை. நாலடி. (ங)

78. வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடந்தும்
இழுக்கினைத் தாம்பெறுபவாயி—னிழுக்கனைத்துஞ்
செய்குறு பாணி சிறிதேயச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது. நாலடி. (ச)

79. தலைமகளிற் றீர்ந்துறைத றன்பிறரிற் சேர்தல்
நிலைமையி றீப்பெண்டிர்ச் சேர்தல்—கலனணிந்து
வேற்றூர் புகுதல் விழாக்காண்ட னேன்பிடுதல்
கோற்றொடியாள் கோளழியு மாறு. அறநெறிச்சாரம். (ரு)

80. அயலூ ரவன் செல்ல வம்மஞ்ச ளாடிக்
கயலேர்கண் ணாரெழுதிப்—புயலைம்பால்
வண்டோச்சி நின்றுலாம் வாளோர் தடங்கண்ணா
டண்டோச்சிப் பின்செல்லுங் கூற்று. அறநெறிச்சாரம். (சு)

81. பெண்ணெனப்படுவகேண்மோபீடிலபிறப்புநோக்கா
வுண்ணிறையுடையவல்லவோராயிரமனத்தவாகு
மெண்ணிப்பத்தங்கையிட்டாலிந்திரன்மகளுமாங்கே
வெண்ணெய்க்குன்றெரியுற்றூர்போன்மெலிந்துபின்னிற்குமன்றே சிந்()

82. பள்ள முதுநீர்ப் பழகினு மீனினம்
வெள்ளம் புதியது காணின் விருப்புறூஉம்.

கள்ளவிழ் கோதையார் காமனோ டாயினு
முள்ளம் பிறிதா யுருகலுங் கொண்ணீ. வளையாபதி. (அ)

83. உண்டியுட் காப்புண் டுறுபொருட் காப்புண்டு
கண்ட விழுப்பொருள் கல்விக்குக் காப்புண்டு
பெண்டிரைக் காப்ப திலமென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே. வளையாபதி. (கூ)

84. எத்துணை யாற்று ளிடுமணை னீர்த்துளி
புற்பனி புக்க மரத்திலை நுண்மயி
ரத்துணை யும்பிற ரஞ்சொலி னார்மனம்
புக்கன மென்று பொதிபறைப் பட்டார். வளையாபதி. (ய)

85. தளிப்பெயற் றண்டுளி தாமரை யின்மேல்
வளிப்பெறு மாத்திரை நின்றற் றொருவ
னளிப்பவற் காணுஞ் சிறுவரை யல்லாற்
றுளக்கிலர் நில்லார் துணைவனைக் கையார். வளையாபதி. (யக)

ஒன்பதாவது அதிகாரம்—புதல்வரைப்பெறுதல்

86. சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைக்கட் டோன்றிற் றான்பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும். நாலடி (க

87. கருங்கழல் வெண்குடைக் காவலற்குச் செவ்வாய்ப்
பெருங்கட் புதல்வன் பிறப்பப்—பெரும்பெயர்
விண்ணோர் மலிந்தார் வியலிடத்தா ரேத்தினு
ரெண்ணு ரவிந்தா ரிகல் வெண்பாமாலை (உ)

88. எந்நெறி யாலு மிறைவன் றன்மக்களைச்
செந்நெறி வழியேநிற்பச் செயல்வேண்டு
மந்நெறி மான்சேர்ந்த நோக்கி னுயாங்கவ
நன்னெறிக்கட்டான் செய்த பாவைதனக்குசூளாமணி † (ங)

---

† இச்செய்யுள் அச்சுப் புத்தகத்தில் காணப்படவில்லை.

89. தொக்கிள மலர்துதை விலாத சோலையும்
புக்கிளந் தாமரை யிலாத பொய்கையு
மிக்கிளம் பிறைவி ரிவிலா வந்தியு
மக்களை யிலாதவர் மனையு மொக்குமே சூளாமணி (௪)

90. சூழிநீண் முகத்தன துளைக்கை மாவொடு
மாழை நீண்மணி யிவையெளிய மாட்சியால்
வாழுநீர் மக்களைப் பெறுதன் மாதரா
ராழி சூழ்வை யகத்தரிய தாவதே ௸ (௫)

91. மன்னவ ரான வரல்லரேல் வானவர்க் கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போவிய ரல்லாற்
பின்னு மாதவந் தொடங்கிநோய் பிழைத்தவ ரல்லாற்
சொன்மறுமகப்பெற்றவரருந்துயர்துறந்தார்.இராமாவதாரம் ()

92. பொறையிலா வறிவுபோகப் புணர்விலா விளமைமேவத்
துறையிலா வனசவாவி துகிலிலாக் கோலத் தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னீர்ச்
சிறையிலாநகரம்போலுஞ்சேயிலாச்செல்வமன்றே.விளையா()

93. படைப்புப்பல படைத்துப் பல்லோரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்பட
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைதாம் வாழு நாளே. புறம். [௮]

பத்தாம் அதிகாரம்.—விருந்தோம்பல்.

---

94. இன்சொன் மடமாட்சி யிடமினிதூண் யார்யாக்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்—மென்சொன்
முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தோம்பித்பா ண்ணோர் விருந்து. ஏலாதி. [௧]

95. முறுவ லினிதுரை கானீர் மணைபாய்
கிடைக்கையோ டிவ்வைந்து மென்ப தலைச்சென்றார்க்
கூழொடு செய்யுஞ் சிறப்பு. ஆசாரக்கோவை (உ)

96. நின்ற புகழொடு நீடுவாழ விவ்வுலகி
லொன்ற வுயிர்தளிர்ப்ப வோம்பலால்—வென்றமருள்
வாள்வினை நீக்கி வருகவிருந் தென்னு
மாள்வினை வேள்வி யவன். வெண்பாமாலை (ங)

97. யாறு ள்ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள—தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள. நான்மணிக்கடிகை. (௪)

98. வருந்தி யொருவன்பான் மற்றொருவன் வந்தாற்
பொருந்தி முகமலர்ந்து போற்றி—விருந்தேற்றுத்
தன்னா லியன்றவுந் தானுதவா னாயினவற்
கின்னா நரகே யிடம். பாரதம் (ரு)

பதினொன்றாம் அதிகாரம்—இனியவை கூறல்.

99. புன்சொல்லு நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலு முண்டாமோ
புன்சொல் விடர்ப்படுப்ப தல்லா லொருவனை
இன்சொல் விடர்ப்படுப்ப தில். பழமொழி (க)

100. † இன்சொலா னாகுங் கிளைமை யியல்பிலா
வன்சொலா னாகும் பகைமைமன—மென்சொல்லி
னாய்விலா னாருளவ் வருளினா மனத்தான்
வீவில்லா வீடாய் விடும். நான்மணிக்கடிகை. (உ)

101 சிதைவுரையான்[1] செற்ற முரையான் சீரில்லா[2]
ரியல்புரையா னீன முரையா—னசைவாற்குக்[3]
கட்டுவ தீவானைக் கொவ்வைபோற் செவ்வாயாய்
நாடுவர் விண்ணோர் நயந்து. ஏலாதி (ங)

† இப்பாட்டு அச்சிட்ட பிரதிகளில் காணப்படவில்லை.
பிரதிபேதம் (1) சிதைபுரையான், (2) சீறில்லான், நசையவற்குக்கூடுவ

102. மலர்ந்த முகத்தா னுமதுர வுரையானும்
நலந்தந் திடுவார்க ளல்லோர்—புலந்திருந்த
வின்னு முகத்தா னருளா திடும்பொரு
டன்னாற் பயனுண்டோ தான். பாரதம் (ச)

பன்னிரெண்டாம் அதிகாரம்—செய்ந்நன்றி யறிதல்.

103. நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்று முறுதியே சூழ்க வெறிதிரை
சென்றுலாஞ் சேர்ப்ப வதுபோல நீர்போயுமொன்
றிரண்டாம் வாணிக மில். பழமொழி (க)

104. தமரானுந் தம்மானு முற்றுலொன் றாற்றி
நிகராகிச் சென்றாரு மல்ல ரிவர்திரை
நீத்தநீர்த் தண்சேர்ப்ப செய்த துவவாதார்க்
கீத்ததை யெல்லா மிழவு. பழமொழி (உ)

105. காமற்ற தில்லாதார் தாஞ்சாரப் பட்டாரைத்
தீமாற்றத் தாலே பகைப்படுத்திட்—டேமாப்ப
முன்னேட்டுக் கொண்டு முரணஞ்சிப் போவாரே
யுண்ணோட் டகலுடைப் பார். பழமொழி (ங)

106. நாடி நமரென்று நன்குபுறந் தந்தார்க்கு[1]
கேடு பிறரோடு சூழ்தல் கிளர்மணி
நீடுகல் வெப்ப நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல். பழமொழி (ச)

107. நமனென் றிருநாழி யீத்தவ னல்லா
நமனென்று காயினுந் தான்காயான் மன்னே
யவனிவ னென்றுரைத் தெள்ளிமற் றியாரே
நமனெய்யை நக்கு பவர். பழமொழி (ரு)

108. தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்—பனையனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு. நாலடி (சு)

(பா.) பேதம் 1 தந்தாரை,

109. ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
வறம்பா டிற்றே யாயிழை கணவ
காலை யந்தியு மாலை யந்தியும்
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய்ப் புன்கந் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு கிழித்த வொக்கலொ
டிரத்தி நீடிய வகன்றலை மன்றத்துக்
கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
யமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்
ககலாச் செல்வ முழுவதுஞ் செய்தோ
னெங்கோன் வளவன் வாழ்க வென்றுநின்
பீடுகெழு நோன்றாள் பாடே னாயிற்
படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன்
யானோ தஞ்சம் பெரும விவ்வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயி
னிமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழ்க² பலவே. புறம் (ஸ)

பதின்மூன்றாம் அதிகாரம்—நடுவுநிலைமை.

110. காய்த லுவத்த லகற்றி யொரு பொருட்க
ணாய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
ணுற்ற குணந்தோன்றா தாகு முவப்பதன்கட்
குற்றமுந் தோன்றாக் கெடும். அறநெறிச்சாரம் (க)

பிரதிபேதம். 2 வாழிய

111. ஒக்கும் வகைபா லுடன்பொருளுஞ் சூதின்கட்
பக்கத் தொருவ னொருவன்பாற் பட்டிருக்கு
மிக்க சிறப்பின ராயினுந் தாயர்க்கு
மக்களுட் பக்கமோ வேறு. பழமொழி (உ)

112. வாரம் பட்டுழித் தீயவு நல்லவாங்
தீரக் காய்ந்துழி நல்லவுந் தீயவா
லோரம்1 வையத்தியற்கை யன்றோவெனா2
வீர வேனெடுங் கண்ணி விளம்பினாள். சிந்தாமணி (ங)

113. கோதி லாதவர் மக்கள் மக்களா
மேதி லாதவ ரியைந்த தீமையா
லாத லாற்றமர் பிறர்க ளென்பதாங்
கோதி னாலவர்க் குள்ள தில்லையே3. சூளாமணி (ச)

பதினான்காம் அதிகாரம்—அடக்கமுடைமை.

114 அடங்கி யகப்பட4 வைந்தினையுங்5 காத்துத்
தொடங்கிய மூன்றினான் மாண்டதன்—டடம்பொழியச்
செல்லும்வாய்க் கேமஞ் சிறுகாலை செய்தாரே6
கொல்லிமேற் கோட்டு7 வைத்தார். பழமொழி (க)

115. கற்றறிந்தார் கண்ட தடக்க மறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார்—தெற்ற
வறைக லருவி யணிமலை நாட
நிறைகுட நீர்தளும்ப லில். பழமொழி (உ)

116. செம்மாந்து செல்லுஞ் செறுநரை யட்டவர்
தம்மேற் புகழ்பிறர் பாராட்டத்—தம்மேற்றாம்
வீரஞ்சொல் லாமையே வீழ்க களிப்பினுஞ்
சோரம் பொதியாத வாறு. பழமொழி (ங)

பிரதிபேதம். 1 ஒரும், 2 வெனா, 3 கோதிலார் குலமக்கண் மாக்கண்மற் றேதிலா ரெனவியைந்த தின்மையா, ராதலாற்றமர் பிறர்களாவதங், கோதி லாரவர்க் குள்ளதில்லையே. 4 யகப்பட்ட, 5 ஐந்தினைக், 6 செய்யாரே, 7 கொட்டு (இவை யிரண்டும் சங்கபாடம்)

117. பொல்லாத சொல்லி மறைந்தொழுகு பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கு—நல்லாய்
மணலுண்* மூழ்கி மறைந்து கிடக்கு
நுணலுந்தன் வாயாற் கெடும். பழமொழி (ச)

118. நனிகடற்றண் சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம்—பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரங் கூறப் படும். நாலடி [ரு]

119. கற்றறிந்த நாவினார் சொல்லார்தஞ் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர்—பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி. நாலடி. (சு)

120. வாயி னடங்குத றுப்புரவா மாசர்
கொள்கை யடங்குத றிப்பியமாம்—பொய்யின்றி
நெஞ்ச மடங்குதல் வீடாகு மிம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள். திரிகடுகம். [எ]

121. தன்னைத்தன் னெஞ்சம் கரியாகத் தானடங்கிற்
பின்னைத்தா னெய்தாப் பயனில்லை1—தன்னைக்
குடிகெடுக்கு நெஞ்சிற்குக்2 குற்றேவல் செய்யின்3
பிடிபடுக்கப் பட்ட களிறு. அறநெறிச்சாரம். (அ)

122. நின்னை யடையப் பெறுகிற்கிலே னன்னெஞ்சே
பின்னையா ணுரைப் பெறுகிற்பே—நின்னை
யறப்பெறு கிற்றேன்4 பெற்றேன்மற் றீண்டே
துறக்கந் திறப்பதோர் தாள். அறிநெறிச்சாரம். (கூ)

123. இந்தியக் குஞ்சரத்தை ஞானவிருங் கயிற்றாற்
சிந்தனைத் தூண்கட்டித் துதிபெறப்5—பந்திப்பா
ரிம்மைப் பயனு6 மினிச்செல் கதிப்பயனுந்
தம்மைத் தலைப்படுப்பார் தாம்7. அறநெறிச்சாரம் (ய)

பிரதிபேதம் * மணலுண்கன். 1 நலனில்லை, 2 நீநெஞ்சிற்கு, 3 செய்தல், 4 கிற்பானேல், 5 தாள்பூட்டிச்சேர்த்தியே, 6 புகழும், 7 தலைப்படுத்துவார்.

124. ஆக்கப் படுக்கு மருந்தளைவாய் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்கும்
காக்கப் படுவ விந்திரிய மைந்தினு
நாக்கல தில்லை தனிவெல்லு மாறே. வளையாபதி (கக)

பதினைந்தாம் அதிகாரம்---ஒழுக்கமுடைமை.

125. நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொலோ
டின்னாத வெவ்வுயிர்க்குஞ் செய்யாமை—கல்வியோ
டொப்புர வறித லருளுடைமை நல்லினத்தா ரோடு
நட்ட லிவையெட்டுஞ் சொல்லிய வாசார வித்து. ஆ. கோவை (க)

126. பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை
யிலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப வென்றும்
ஒழுக்கம் பிழைபா தவர். ஷை (உ)

127. வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட நெறி8. அறநெறிச்சாரம் (ங)

128. எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தேவ
ருச்சந்தலையோ டிவையென்ப யாவருந்
தீட்பத்தாற் றீண்டாப் பொருள். ஆசாரக்கோவை [ச]

129. தேவர் வழிபாடு தீக்கனா வாலாமை
யுண்டது கான்றன் மயிர்களைத லூண்பொழுது
வைகு துயிலோ டிணைவிழைச்சுக் கீழ்மக்கண்
மெய்யுற லேனை மயலுற லீரைந்து
மையுறு தாடுக நீர். ஷை [ரு]

பிரதிபேதக். 8 முறை.

130. அரச னுவாத்தியாய னுய்தந்தை தம்மு
னிகரில் குரவ ரிவரைவ ரிவரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக வென்பதே
யாவருங் கண்ட நெறி. ஆசாரக்கோவை. [௩]

131. முன்றுவ்வார் முன்னெழார் மிக்குரை ரூணின்க
ணென்பெறினு மாற்ற வலமிரார் தம்மிற்
பெரியார்தம் பாலிருந்தக் கால். ௸ [௭]

132. உச்சியம் போழ்தோ டிடையாம மீரந்தி
மிக்க விருதேவர் நாளோ டுவாத்தின
மட்டமியு மேனைப்பிறந்த நாளிவ்வெட்டு[1]
மொட்டா ருடனுரைவின் கண். ௸ (௮)

133. உடைநடை சொற்சோர்வு வைதலிந் நான்கு
நிலைமைக்குங் கல்விக்கு மாண்மைக்குந் தத்தங்
குடிமைக்குந் தக்க செயல். ௸ (௯)

134. பாழ்மனையுந் தேவர் குலமுஞ் சுடுகாடு
மூரில் வழியெழுந்த வொற்றை முதுமரமுந்
தாமே தமியர் புகாஅர் பகல்வளரார்
நோயின்மை வேண்டு பவர். ௸ (௰)

135. பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்
காற்ற வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி யெனப்படு வார். ௸ (௰௧)

136. ஈன்றாண் மகடன் னுடன்பிறந்தா ளாயினுஞ்
சான்றோர் தனித்தா வுறையற்க வைம்புல னும்
தாங்கற் கரிதா கலான். ௸ (௰௨)

137. அறியாத தேயத்தா னாதுலன் மூத்தா
னிளையா னுயிரிழந்தா னஞ்சினா னுண்பா

1 இவ்வனைத்தும்.

னரசர் தொழிறலை[1] வைத்தான் மணாளனென
றெண்பதின்மர் கண்டுரைக்குங்கா லாற்றவு[2]
யாசாரம் வீடு பெற்றார். ஆசாரக்கோவை (௳)

138. சுகையொடு மந்திர நட்டார்க்கு வாரம்
பகையொடு பாட்டுரையென் றைந்துந்—தொகையொடு
மூத்தோ ரிருந்துழி வேண்டார் முதுநூலுள்
ளார்த்தா ரறிந்த வாய்ந்து. சிறுபஞ்சமூலம். (௴)

139 தொழீஇயட வுண்ணார் தோழனிற் றுஞ்சார்
வழீஇப் பிறர்பொருள் வெளவார்—கெழீஇக்
கலந்தபிற் கீழ்காணுங் காணுப் மடவாய்
புலந்தபிற் போற்றார் புலை. சிறுபஞ்சமூலம். (௵)

140. * அருளுடைமை கொல்லாமை யைந்தடக்கல் வாய்மை
யிருளுடையாக் கல்வியோ டைகை—புரையில்லா
வுள்ளத்திற் றீர்த்தவை யுளவாகப் பெற்றால்
வெள்ளத்திற் றீர்த்த மிகை. பழமொழி. [௬]

141. தூய்மை மனத்தவர் தோழர் மனையகத்துந்
தாமே தமியர் புகல்வேண்டா—தீமையா
லூர்மிகி னில்லை கரியோ வொலித்துடன்
நீர்மிகி னில்லை சிறை. பழமொழி [௭]

பதினாறும் அதிகாரம்—பிறர்மனை நயவாமை.

142. * செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ—யும்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
யுலியாகி யாடியுண் பார். நாலடி. [௧]

1 திருத்தலை 2 மெய்யான
* இப்பாட்டு அச்சிட்ட பிரதிகளிலெல்லாம் காணப்படவில்லை.

143. அறப்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள். நாலடி. [௨]

144. புக்கவிடத் தச்சம் போதரும்போ தச்சந்
துய்க்குமிடத் தச்சந் தோன்றுமற்—காப்பச்ச
மெக்கா லுமச்சந் தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில் புகல். நாலடி [௩]

145. அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
யம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பு
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
றலைநக்கி யன்ன துடைத்து. நாலடி. [௪]

146. காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணன்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகொண்ட1
வின்ப மெனக்கெனைத்தாற் கூறு. நாலடி. [௫]

147. பெரியவாட்டங்கட்செவ்வாய்ப்பிறர்மனைநயக்கு2மாந்த
ரரியவாய்ப்பட்டுறஞ்சொற்கூர்முண்மத்திகைப்புடைப்பு3மன்றி
யொருவர்வாயுமிழப்பட்டதம்பலமொருவர்வாய்க்கொண்
டரியனசெய்யவைத்தானுண்பிறந்தார்கட்கன்றே4. சிந்தா [௬]

148. காதலாள்கரிந்துநையக்கடியமேவள்5கனைந்துகன்றி
யேதிலான்றாரநம்பியெளிதெனவிறந்தபாவத்
தூதுலையுருகவெந்தவெள்ளழற்செப்புப்பாவை
யாதகாதென்னப்புல்லியலறுமாலனைவேந்தே. ஷை [௭]

149. தார நல்லிதந் தாங்கித் தலைநின்மி
னூரு நாடு முவத்த லொருதலை
வீர வென்றி விறன்மிகு விண்ணவர்
சீரி னேத்திச் சிறப்பெதிர் கொள்பவே. வளையாபதி. [௮]

பிரதிபேதம். 1 கண்ட. 2 பிழைக்கும். 3 புடைப்பு. 4 டரியன செய்ய வைத்தாண பிறந்தார் களன்றே. 5 கரிந்து நையக்கடியமே

150. பெண்ணி ளுகிய பேரஞர் பூமியு
ளெண்ண மிக்கவ ரெண்ணினு மெண்ணிலார்
பின்னி நின்ற பெருவினை மேல்வரு
மென்ன தாயினு மேதில்பெண் ணீக்குமின். வளையாபதி. [கூ]

பதினேழாம் அதிகாரம்—பொறையுடைமை.

151. கறுத்தாற்றித் தம்மைக் கடிய செய்தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழா—லொறுத்தாற்றின்
வானேங் குயர்வரை வெற்ப பயமின்றே
தானே கெடவருஞ்1 சால்பு. பழமொழி [க]

152. தெரியா தவர்தந் திறனில்சொற் கேட்டாற்
பரியாதார் போல விருக்க—பரிவிலா
வம்பலர் வாயை யவிப்பான் புகுவாரே
யம்பலந் தாட்பூட்டு3 வார். பழமொழி (உ)

153. நோவ வுரைத்தாரைத் தாம்பொறுக்க லாற்றுதார்4
நாவி லொருவரை வைதால் வயவுரை
பூவிற் பொலிந்தகன்ற கண்ணு யதுவன்றோ
தீயில்லை யூட்டுந் திறம். பழமொழி (ங)

154. நற்பால கற்றாரு நாடாது சொல்லுவரா
லிற்பால ரல்லா ரியல்பின்மை நோவதென்
கற்பா விலங்கருவி நாடமற் றியாராலுஞ்
சொற்சோர் விலாதா ரோ வில்5. பழமொழி (ச)

155. கையார வுண்டமையாற் காய்வார் பொருட்டாகப்
பொய்யாகத் தம்மைப் பொருளல்ல கூறுபவேன்6
மையார வுண்டகண் மாணிழா யென்பரிவ
செய்யாத வெய்தா வெனின். பழமொழி (ரு)

பிரதிபேதம். 1 தானேன்றிடவரும். 3 அம்பலம் தாழ்ப்பூட்டு 4 லாகாதார். 5 சொற்சோராதாரோவிலர் 6 பொருளல்லார் கூறுபவேல்.

156. மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
யாற்றாமை யென்னு மறிவுடையா—ராற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று. நாலடி (சு)

157. இளையா னடக்க மடக்கம் கிளைபொரு
ளில்லான் கொடையே கொடைப்பய—னெல்லா
மொறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. நாலடி [எ]

158. கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னாச்சொ
லெல்லாருங் காணப் பொறுத்துய்ப்ப—வொல்லை
இடுநீற்றாற் பைபவிந்த நாகம்போற் றத்தம்
குடிமையான் வாதிக்கப் பட்டு. நாலடி. [அ]

159. காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொ
லோவாதே தன்னைச் சுடுதலா—லோவாதே
யாய்ந்தமைந்த கேள்வி யறிவுடையார் எஞ்ஞான்றுங்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து. நாலடி. [கூ]

160. நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கு—மடுங்காலை
நீர்கொண்ட வெம்மைபோற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம். ஷை [௰]

161. உபகாரஞ் செய்ததனை யோராதே தங்க
ணபகார மாற்றச் செயினு—முபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில். ஷை [௰க]

162. எள்ளிப் பிறருரைக்கு மின்னாச்சொற் றன்னெஞ்சிற்
கொள்ளிவைத் தாற்போற் கொடிதெனினுந்—தெள்ளி[1]
யறிவென்னு நீரா லவித்தடக்க[2] லாற்றிற்
பிறிதொன்று[3] வேண்டா தவம். அறநெறிச்சாரம் (கஉ]

பிரதிபேதம் 1 தெள்ள 2 யவித்தொழுக. 3 பிறிதெனினும்.

163. அற்ற வுறுப்பெல்லா மறுவைவயினுன் மறைப்ப
மற்றொருவர் காணு மறையுமால்—வெற்றி
யறையார் சுழலா பவமாய வெல்லாம்
பொறையான் மறைக்குமேற் போம். பாரதம். [கூ]

பதினெட்டாம் அதிகாரம்—வெஃகாமை.

164. உள்ள தொருவ ரொருவர்கை வைத்தக்கால்
கொள்ளும் பொழுதே கொடுக்கதாம்—கொள்ளா
நிலைப்பொரு ளென்றதனை நீட்டித்தல் வேண்டா
புலைப்பொரு டங்கா வெளி. பழமொழி (க)

165. அல்லது செய்வா ரரும்பொரு ளாக்கத்தை
நல்லது செய்வார் நயப்பவோ—வொல்லொலிநீர்
பாய்வதே போலுந் துறைவகே டயன
வாவதே போன்று கெடும். பழமொழி (உ)

166. மடங்கிப் பசிப்பினு மாண்புடை யாளர்
தொடங்கிப் பிறருடைமை மேவார்—குடம்பை
மடலொடு புட்கலா மால்கடற் சேர்ப்ப
கடலொடு காட்டொட்டு வில். பழமொழி (ஙு)

167. தானத்துக் குரித்து மன்று தானவி கதியிற் சால
வீனத்தி னரகத் துய்க்கு4 மச்சத்தை யிழக்கப் பண்ணு
மானத்தை யழிக்குந் துய்த்தன் மற்றவர்க் கடிமையாக்கு
மூனத்து நரகத் துய்க்கும் பிறர்பொரு ளுவக்கில்வேந்தே.
சாந்தி புராணம். (சு)

பத்தொன்பதாவது அதிகாரம்—அவா.

168. முகம்புறத்துக் கண்டாற் பொறுக்கலா தாரை
யகம்புகுது மென்றிருக்கு மாசை யிருங்கடத்துத்
தக்க நெறியிடைப் பின்னுஞ் செலப்பொருள்
ஒக்கலே வேண்டி யழல். பழமொழி (க)

பிரதிபேதம். 4 தானறிநதீபிற்சால வீனத்திலுய்க்க நிற்கு மென்பது செந்தமிழ் தொகுதி VIII பக்கம் 209.

169 யாவரே யானு மிழந்த பொருளுடையார்
தேவரே யாயினுந் தீங்கோர்ப்பர்—பாவை
படத்தோன்று நல்லாய் நெடுவேல் கெடுத்தான்
குடத்துள்ளு நாடி விடும். பழமொழி (௨)

170. ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகப்
போகா வெறும்பு புறஞ்சுற்றி[1]—யாதுங்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர். நாலடி. (௩)

171. இன்றுங் கொல்லேயே யாது மினிச்சிறிது
நின்றுது மென்று நினைத்திருந்—தொன்றி
யுரையின் மகிழ்ந்துதம் முள்ளம் வேறாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர். நாலடி. [௪]

172. கள்வ மென்பார்க்குந் துயிலில்லைக் காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
காப்பார்க்கு மில்லை துயில். நான்மணிக்கடிகை. (௫)

173. உரிதனிற் றம்மொ டுழந்தமை கண்டு
பிரிவின்றிப் போற்றப் படுவார்—திரிவின்றித்
தாம்பெற்ற தனுவ வார்பெரி தகழிற்
பாம்பு காண்பாரு முடைத்து. தனி.† [௬]

174. தோள்வழங்கி வாழுந் துறைபோற் கணிகையும்
நாள்கழகம் பார்க்கு நயமிலாச் சூதனும்
வாசிகொண் டொண்பொருள் செய்வானு மிம்மூவர்
ஆசைக் கடலுள்ளாழ் வார். திரிகடுகம். [௭]

175. இரந்துகொண் டொண்பொருள் செய்வ லென்பானும்
பரந்தொழுகும் பெண்பாலிற் பாசம் வைப்பானு
விரிகட லூடு போவானு[2] மிம்மூவர்
அரிய துணிந்தொழுகு வார்.[3] திரிகடுகம் [

பிரதிபேதம். 1 போகாதெறும்பு புறஞ்சுற்றும். 2 செல்வானும். 3 வார்.

† இது எந்நூலில் உள்ளதென்று புலப்படவில்லை.

இருபதாவது அதிகாரம்—புறங்கூறாமை

176. முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கண்ணின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றழித்துரைக்கு மாந்தரை[3] யஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை. அறநெறிச்சாரம். (க)

177. தாக்குற்ற போழ்திற் றமரேபோ னன்குணைத்துப்
போக்குற்ற போழ்திற் புறனழீஇ மேன்மைக்க
ணோக்குற்ற வரைப்பழிப்ப தேஎன்னெ[4] ருனு
மூக்கற்ற தற்கில் பழி. பழமொழி [க]

178. பண்டின்ன ரென்று தமரையுந் தம்மையுங்
கொண்ட வகைபாற் குறைதீர நோக்கியக்கால்
விண்டவரோ டொன்றிப் புறனுரைப்பி னஃதாலவ்
வுண்டீவிற் றீயிடு மாறு. பழமொழி. [௩]

இருபத்தோராம் அதிகாரம்—இகழாமை

179 ஆவிற் கரும்பனி தாங்கிய மாலையுங்
கோவிற்குக் கோலமன்னன் றுலகங் கூறுமால்
தேவர்க்கு மக்கட் கெனல்வேண்டா தீங்குரைக்கு
நாவிற்கு நல்குர வில். பழமொழி [க]

180. பல்லார் ரவைநடுவட் பாற்பட்ட சான்றவர்
சொல்லா லொருவரையு முள்ளூன்றார்[1]—பல்லா
நிரையுங் காத்த நெடியோனே யாயினு
முரைத்தா லுரைபெறுத லுண்டு. பழமொழி. [உ]

181. உள்ளூ ரவரா லுணர்ந்தார் முதலெனினு
மெள்ளாமை வேண்டு மிலங்கிழாய்—தள்ளா
தீழுங்கன் முதுபதி யங்காடி மேயும்
பழங்கன் றேறுதலு முண்டு பழமொழி. [௩]

பிரதிபேதம் 3 சான்றோரை. 4 பழித்தலென் 5 அஃ தன்றே. 1 சொல்லார்

182. கள்ளி வயிற்றி னகிற்பிறக்கு மான்வயிற்றி
லொள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுட்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி. நான்மணிக்கடிகை. [௪

183. பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுந் தாங்கும்2
சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல். அறநெறிச்சாரம். (௫)

184. சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்ற மாஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை. சிறுபஞ்சமூலம். (௬)

இருபத்திரண்டாம் அதிகாரம்—தீவினையச்சம்.

185. எனக்குத் தகவன்று லென்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் றானாய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் றென்னவனுங் காணாரெனச்
செய்யார் மாணா வினை. பழமொழி. [௧]

186. †அஃகநீ செய்யலென வறிந்தா ராய்ந்த
வெஃகல் வெகுடலே தீக்காட்சி—வெஃகிய
கள்ளத்த வல்ல கருதி னவைமூன்று
முள்ளத்த வாக வுணர். திரிகடுகம். (௨)

187. †நிலையளவு நின்ற நெடியவர்தா நேரார்
கொலைகளவு காமத்தீ வாழ்க்கை—யலையளவி
மைமையன நீண்ட மலர்க்கண்ணா யிம்மூன்று
மெய்யன வாக மிகும். திரிகடுகம். (௩)

பிரதிபேதம். ஒருவரையு முன்னூன்ற. 2 காக்கும்.
† இச்செய்யுள்கள் அச்சிட்ட பிரதிகளில் இல்லை.

148070

188. மையேர் தடங்கண் மயிலன்ன சாயலாய்1
மெய்யே யுணர்ந்தவர்தா முறையார்2—பொய்யே
குறளை கடுஞ்சொற் பயனிலசொன் னான்கு
மறவியின்3 வாயினவா மற்று. ஏலாதி. (௪)

189. கோறலுநஞ் சூனதனைத்4 துய்த்தல் கொடுநஞ்சு
வேறலு நஞ்சுமா றல்லானைத்—தேறினா
னீடாங்குச் செய்தலு நஞ்சா மிளங்கிளையை
நாடாதே தீதுரையு நஞ்சு, சிறுபஞ்சமூலம். (௫)

190. தன்னைச் செறுதானைக் காய்வான் றகாக்கொலையன்
பின்னைக் குரவரைப் பேணாதான்—முன்னொருவ
னில்லாளைக் காதலித்தா னிந்நால்வர் வெந்நரகத்
தல்லா லழுந்தா தவர். பாரதம். (௬)

191. அற்றங்கள் பார்த்தங் கடைந்திருந்து சொல்வானுங்
குற்றம்போய்க் கோவுக் குரைப்பானுஞ்—செற்றத்தே
நின்றானுஞ் செய்ந்நன்றி நீத்தானு மந்தணரைக்
கொன்றாரோ டொப்பர் குறித்து, பாரதம் [௭]

192. பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லிநீ
ருய்யன் மின்னுயிர் கொன்றுண்டு வாழுநாட்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன. வளையாபதி (௮)

193. கள்ளன் மின்கள வாயின யாவையுங்
கொள்ளன் மின்கொலை கூடி வருமற
மெள்ளன் மின்னில ரென்றெண்ணி யாரையு
நள்ளன் மின்பிறர் பெண்ணொடு நண்ணன்மின். ஷை [௯]

194. குழற்சிகை கோதை சூட்டிக்கொண்டவனி றப்ப மற்றோர்
நிழற்றிகழ் வேலினானை நேடிய நெடுங்க ணாளும்
பிழைப்பிலாட்புறந் தந்தானுங் குரவரைப் பேணல்செய்யா
திழுக்கின ரிவர்கள் கண்டாயிடும்பை நோய்க்கிரைகளாவார் சிந் (௰)

பிரதிபேதம். 1 மயிலன்னாய் சாய[illegible] 2 [illegible]ப்பார். 3 மறலையின் 4 நஞ்சனை.